[1979 ஏப்ரல் 7

காஞ்சீபுரத்தில் பட்டு உற்பத்தி தொழிற்சாலை.

வினா எண். 658—திரு. எஸ். ஜே. இராமசாமி : மாண்புமிகு கிராமத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சீபுரத்தில் பட்டு உற்பத்தி தொழிற்சாலை அமைக்க அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: (அ) அவ்விதத் திட்டம் ஏதும் இப்போது இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : துணைத் தலைவர் அவர்களே, நமது தமிழ்நாட்டிலே பட்டுக்குப் பெயர் போன இடம் காஞ்சீபுரம். பட்டு உற்பத்தி செய்வதற்கு அந்த இடத்திலே ஒரு பட்டு உற்பத்திச் தொழிற்சாலையை அமைக்க, அதற்கு மிகுந்த கவனம் செலுத்திக் கொண்டுவர அரசாங்கம் முன்வருமா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

[முற்பகல் 9-30]

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : பேரவைத் துணைத் தலைவரவர்களே, தற்போது செங்கற்பட்டு மாவட்டத் திலேயே முசுக்கொட்டை பயிரிடப்படும் பரப்பானது 75 ஏக்கர் என்ற அளவிலேதான் இருக்கிறது. இதன் மூலம் தோராயமாக 8,000 கிலோ பட்டுக் கூடுகளை ஆண்டு ஒன்றுக்கு உற்பத்தி செய் கிறோம். இதை அதிகரிக்கின்றபோது அங்கே இயற்கையாகவே ரீலிங் யூனிட் வருவதற்கு வாய்ப்பிருக்கிறது. மேலும் 6-வது ஐந்தாண்டுத் திட்டத்திலே பல்வேறு திட்டங்களை உருவாக்கி மத்திய அரசின் ஒப்புதலுக்காக அனுப்பி வைத்திருக்கிறோம். விரைவிலே அந்த ஒப்புதல் கிடைத்த பிறகு அனைத்து இடங்களி லும் பட்டுக்கூடு வளர்ப்பை அதிகப்படுத்தி தொழிற்சாலைகளை ஏற்படுத்துவதற்குரிய நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளும்.

திரு. எம். எம். ஏ. ரசாக் : பேரவைத் துணைத் தலைவரவர் களே, காஞ்சீபுரத்தைப் போலவே தென்காசி, செங்கோட்டைத் தாலுக்காக்களில் அதிகமான பட்டுக் கூடுகளை வளர்த்து பட்டு உற்பத்தி செய்து வருகிறார்கள். ஆகவே, காஞ்சீபுரத்தைப் போல

இல்லாவிட்டாலும் அங்கே ஒரு சிறு தொழிற்சாலை அதாவது பட்டு தொழிற்சாலை ஆரம்பிக்க இந்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : துணைத் தலைவரவர்களே, திருநெல்வேலி மாவட்டத்திலே பட்டுப் பூச்சிகளை உற்பத்தி செய்கின்ற பணிகள் தீவிரமாக இப்போது நடந்து வருகின்றது. முசுக்கொட்டை பயிரிடுகின்ற பரப்பளவும் அங்கே அதிகப்படுத்தப்பட்டிருக்கிறது. எனவே, இவைகளின் பின்னணியில் அங்கே பட்டுத் தொழிற்சாலை வருவதற்கு நிரம்ப வாய்ப்பு இருக்கிறது.

திரு. சி. ஆறுமுகம் : பேரவைத் துணைத் தலைவரவர்களே, அண்ணா அவர்கள் பிறந்த இடமான காஞ்சீபுரத்தின் அருகிலே முசிறிவாக்கம் என்ற இடம் இருக்கிறது. அங்கே அரசுப் பண்ணை இருக்கிறது. அங்கே அதிகமான அரசு நிலமும் இருக்கிறது. தண்ணீர் வசதியும் இருக்கிறது. அப்படி இருக்கிற நிலைமைகளைக் கருத்தில் கொண்டு அங்கே முசுக்கொட்டை வளர்க்கும் திட்டத்தை அரசு கொண்டுவர முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவரவர்களே, இதை அரசு பரிசீலிக்கும்.

திரு. எஸ். ஆர். இராதா : தலைவரவர்களே, இப்போது முசுக்கொட்டை பயிரிடுகின்ற விவசாயிகள் அதனை விற்க நினைக்கின்றபோது விற்பதற்கு வாய்ப்பு வசதிகள் இல்லாமல் பல விவசாயிகள் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள். ஆகவே, அரசு தரப்பிலேயோ அல்லது பஞ்சாயத்து யூனியன் போன்றவைகளின் மூலமாகவோ அந்த இலைகளை வாங்கி அரசாங்கத்தின் மூலமாக அந்த பூச்சியை வளரச்செய்து அதன் மூலமாக பட்டு எடுப்பதற்குரிய திட்டத்தை அரசு வைத்துக் கொண்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவரவர்களே, வெறும் முசுக்கொட்டை இலைகளை மட்டும் ஒரு இடத்திலே உற்பத்தி செய்து வேறு இடத்திலே பட்டுப் பூச்சிகளை வளர்ப்பது என்பது காரிய சாத்தியமா என்பது அரசுக்குத் தெரியவில்லை இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் யோசனையைப் பரிசீலிக்கிறோம்.

[1979 ஏப்ரல் 7

திரு. மு. ஆறுமுகம்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, பட்டு உற்பத்தி இயக்குநர் அலுவலகம் ஒன்றை சேலத்தில் நிறுவுவதாக அறிவிக்கப்பட்டது. அது எந்த அளவில் இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

அதே போன்று 6-ஆவது ஐந்தாண்டுத் திட்டத்தில் பட்டு உற்பத்திக்கென்று அரசு எவ்வளவு தொகை செலவிட இருக்கிறது என்பதையும் தெரிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: தலைவரவர்களே, பட்டு உற்பத்தியைத் தீவிரப்படுத்த வேண்டும் என்பதற்காக ஒரு இயக்குநர் அலுவலகம் டைரக்டரேட், தனியாக அமைக்க வேண்டும் என்று அரசு கொள்கை ரீதியாக முடிவெடுத்திருக்கிறது. அந்த இயக்குநர் அலுவலகம் சேலத்திலேயே இருக்கும் என்று அரசு தீர்மானித்திருக்கிறது.

அதே போல் இந்த 6-வது திட்டத்தில் 6 கோடி ரூபாய் அளவில் 12 ஆயிரம் ஏக்கர் அளவில் முசுக்கொட்டையை அதிகமாக வளர்ப்பதற்கான திட்டத்தை தயாரித்து மத்திய அரசின் ஒப்புதலுக்காக நாம் அனுப்பி இருக்கிறோம்.

திரு. ரா. வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு: தலைவர் அவர்களே, பின்தங்கிய மக்களாகிய ஆதிவாசிகள், மலைவாசிகள் சில பகுதிகளில் இந்தப் பட்டு தொழிலை தங்களுடைய குடிசைத் தொழிலாக இன்றைக்கு நடத்தி வருகிறார்கள். அந்த அடிப்படையிலே கோவை மாவட்டம் தாளவாடி யூனியனிலே ஏராளமான ஆதிவாசிகள் இந்தப் பட்டுத் தொழிலை குடிசைத் தொழிலாக நடத்தி வருகிறார்கள். அப்படி நடத்தி வரக்கூடிய அந்தத் தொழிலின் மூலமாக அவர்கள் உற்பத்தி செய்கின்ற அந்தப் பட்டினை பர்சேஸ் பண்ணுவதற்கு போதிய ஏற்பாடுகள் இல்லை. அவர்கள் அதனை எடுத்துக் கொண்டு அண்டை மாநிலமான மைசூருக்கு எடுத்துச் சென்று விற்பனை செய்கிறார்கள். ஆகவே, அவர்களது உற்பத்தியினை பர்சேஸ் செய்வதற்கு ஒரு மையத்தை அந்தத் தாளவாடி பகுதியிலே ஏற்படுத்துவதோடு அங்கே இப்படி உற்பத்தி செய்கின்ற அளவினைக் கருத்தில் கொண்டு அந்தப் பகுதியிலேயே ஒரு தொழிற்சாலை ஏற்படுத்தப் படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

1979 ஏப்ரல் 7]

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : துணைத்தலைவர் அவர்களே, தாளவாடி பகுதியில் ஏற்கனவே பட்டு நூற்பாலை இருக்கிறது. அந்தப் பகுதியிலே உற்பத்தி செய்யப்படுகிற பட்டுப் புழுக் கூடுகளை அந்த நூற்பாலை பயன்படுத்தியது போக கூடுதலாக உற்பத்தி செய்வதால், அது பெங்களூருக்கும் மைசூருக்கும் எடுத்துச் செல்வதால் இப்படிப்பட்ட நிலைமைகள் ஏற்படுகின்றன. இப்போது நூற்பாலைகளை அதிகப்படுத்தி வருகிறோம். கூட்டுறவு முறையிலும், தனிப்பட்ட முறையிலும் 20-க்கும் மேற்பட்ட நூற்பாலைகளைத் துவக்க வேண்டும் என்று அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. அதுபோல் உற்பத்தி செய்யப்படுகின்ற பட்டை தமிழகத்தில் குறிப்பாக கூட்டுறவு சங்கங்கள் வாங்கவேண்டும் என்பதற்காக, அதற்கென ஒரு இணைப்பு மையம் (பெடரேஷன்) காஞ்சீபுரத்தில் இப்போது செயல்பட்டு வருகிறது. அதன் மூலம் மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் சொன்ன சில இடர்பாடுகள் எல்லாம் தவிர்க்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே. கந்தசாமி: பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, பட்டுப் பூச்சி வளர்ப்புத் தொழில் உதவிகரமாகவும் லாபகரமாகவும் இருப்பதால் அது இந்த நாட்டில் புதிதாக ஆரம்பிக்கப் படவேண்டும் என்பது அரசினுடைய உள் நோக்கம். கிராமப்புறங்களில் தொழில் வளர்ச்சி ஏற்படுத்த வேண்டும் என்று சொல்லியிருக்கிற காரணத்தால் என்னுடைய ஆண்டிப்பட்டி தொகுதியில், மதுரை மாவட்டத்தில் ஒரு பட்டு நூற்பாலை தொழிற்சாலையை ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். காரணம் அந்தப் பகுதி மிகவும் பிற்பட்ட பகுதி. பட்டினம் இல்லாத, கிராமங்கள் நிறைந்த பகுதி. வைகைப் பகுதியாக இருப்பதால் தண்ணீர் கிடைக்கும். விவசாயம் மாதிரி பண்ணை இருப்பதால் நிலம் இருக்கிறது. எனவே, அங்கே பட்டு நூற்பு ஆலைத் தொழிற்சாலையை ஏற்படுத்த அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்ததைப் போல் தனிப்பட்டவர்களில் சிலபேர் அந்தப் பகுதியில் பட்டுக் கூடுகளை உற்பத்தி செய்கிறார்கள். அங்கே எவ்வளவு உற்பத்தியாகிறது என்பதற்கான தகவலைச் சேகரித்து, விரைவில் ஆண்டிப்பட்டியில் பட்டு நூற்பாலையைத் துவக்குவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.